# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏன் தம்பி; அங்கன்வாடி பணியாளர் களின் பென்ஷன் உயர்த்திட்டதா சொல் றாங்க. ஆனாலும் அவங்க வருத்தத்திலே இருக்கிறதா சொல்றாங்களே?

**பட்டணம் :** **ஆமாம்யா; பென்ஷனை உயர்த்திட்டா போதுமா! அதை மாதா மாதம் தர வேண்டாமா? பென்ஷன் எப்ப வரும்ன்னு தெரியாமா அவங்க தினம்தினம் அவஸ்தை படறதை பார்க்க பாவமா இருக்கு.**

## கோவை மாவட்டம்

# மேட்டுப்பாளையம் கல்லாரில் கனமழை!

## ராட்சத மரம் விழுந்ததால் போக்குவரத்து பாதிப்பு!

கோவை, அக். 8 –

கோவை மாவட்டம் மேட்டுப்பா ளையம் கல்லார் அருகே பெய்த கனமழை காரணமாக ராட்சச மரம் ஒன்று சாலையில் விழுந்து போக்கு வரத்து கடுமையாகப் பாதிக்கப்பட டுள்ளது. மேட்டுப்பாளையத்திலி ருந்து உதகை செல்லக்கூடிய பிரதான சாலையில் ராட்சத மரம் வேரோடு சாய்ந்து விழுந்திருக்கிறது. மரத்தை முறித்து அப்புறப்படுத்தும் பணியில்தீயணைப்புதுறையினரும் வனத்துறையினரும் ஈடுபட்டு வரு கின்றனர்.

செவ்வாய் அன்று நள்ளிரவிலி ருந்து மேற்கு தொடர்ச்சி பகுதிகளில் கனமழையானது பெய்தது. இடியு டன் பெய்த இந்த கனமழை காரண மாக நேற்று (புதன்) அதிகாலை 4 மணி அளவில் மேட்டுப்பாளையத்தி லிருந்து உதகை செல்லக்கூடிய சாலையில் கல்லார் என்ற இடத்தில் ராட்சத மரம் வேரோடு சாய்ந்து விழுந்திருக்கிறது.

இது குறித்த உடனடியாக தீய ணைப்புத்துறையினருக்கும் வனத் துறையினருக்கு தகவல் தெரிவிக்கப் பட்டதை தொடர்ந்து சம்பவ இடத் திற்கு விரைந்து சென்ற வனத்துறை யினர் மற்றும் தீயணைப்பு துறையி னர் அந்த மரத்தை முறித்து அகற் றும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் அந்த பகுதியில் தொடர்ந்து சாரல் மழை பெய்து வரு வதால் மரத்தை முறிக்கும் பணியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மரம் சாலை யில் விழுந்ததால் மேட்டுப்பாளையத் திலுருந்து உதகை செல்லும் வாக னங்களும் உதகையிலிந்து மேட்டுப் பாளையம் செல்லக்கூடிய வாகனங் களும் நீண்ட வரிசையில் காத்திருக் கும் சூழல் ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையே நிலிகிரி மாவட்டத் தில் பெய்த இந்த கனமழை காரண மாக மேட்டுப்பாளையத்தில் இருக்கக் கூடிய பில்லூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து காணப்படுகிறது. அணை யின் மொத்த நீர் இருப்பு 100 அடியில் இருக்கக்கூடிய நிலையில் அணை யின் தற்போதைய நீர் இருப்பு 94 அடியை எட்டி இருக்கிறது.

இதனால் 6,000 கன அடி தண் ணீர் பவானி ஆற்றில் திறந்து விடக்கூ டிய காரணத்தினால் பவானி ஆற்றில் கரையோர பகுதியில் இருக்கக் கூடிய மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று அதிகாரிகள் கேட் டுக்கொண்டுள்ளனர்.

தொடர்ந்து இந்த பகுதிகளில் அதிக மழை பெய்யும் காரணத்தி னால் காட்டாறுகள் அமைத்திருக்கக் கூடிய பகுதிகளுக்கு மக்கள் செல்ல வேண்டும் என்று அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# தமிழ்நாட்டில் 24 மணி நேரத்தில் 12 படுகொலைகள்!

## த.வெ.க. ஆட்சியில் சந்தி சிரிக்கும் சட்டம் - ஒழுங்கு! மக்கள் அச்சம்!

சென்னை, அக். 8 –

செயலற்ற த.வெ.க. ஆட்சியில் தமிழ் நாட்டில் 24 மணி நேரத்தில் 12 படு கொலை சம்பவங்கள் நடைபெற்றுள் ளன. இதனால் பொதுமக்கள் அச்சத்துடன் வாழும் நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் விஜய் தலைமையி லான தவெக ஆட்சி அமைந்தது முதல், நாள்தோறும் கொலை, கொள்ளை, பாலி யல் வன்கொடுமை சம்பவங்கள் சர்வ சாதாரணமாக நடைபெற்று வருகின்றன. சட்டம் ஒழுங்கு சீர்கேட் டால் விஜய் ஆட்சி யில் சாலைக்கு வரவே பொதுமக்கள் அச் சமடைந்துள்ளனர்.

சென்னை மயிலாப்பூரில் 19 வயது இளைஞர் சத்தியசீலன் வெட்டிப் படு கொலை செய்யப்பட்டுள்ளார். திருத்த ணியில் தனது 17 வயது மகளுக்குத் தொல்லை கொடுத்த நபர் மீது காவல்நி லையத்தில் புகாரளித்த தந்தை அவரது வீட்டின் முன்பே வைத்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

சேலத்தில் வீட்டில் தனியாக இருந்த ஜனாபாய் எனும் மூதாட்டி நகைக்காக பக லிலேயே கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார். சேலம் மாவட்டம் கிச்சிப்பாளை யத்தில் மனோகரன் என்பவர், மது அருந்தும் போது ஏற்பட்ட தகராறில் அடித்துக் கொலை செய்யப்பட டுள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம் சாணார்பட்டி காவல் நிலையத்தில் ஜாமின் கையெ முத்து போட்டுவிட்டுத் திரும்பும்போதே வீரபத்திரன் என்பவர் வெட்டிக் கொலை செய்யப் பட்டார். மதுரை மாவட்டம் சமய நல்லூர் அருகே மது போதையில் நிர்வா ணமாக்கி இளைஞர் கொலை செய்யப் பட்டுள்ளார்.

மதுரை சோழவந்தானில் டாஸ்மாக் கடை அருகே இருசக்கர வாகனத்தில் சென்ற சியாம் சுந்தர்ராஜன் என்பவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார். நெல்லை மாவட்டம் வள்ளியூரில் அரசு பேருந்து நடத்துனர் சிவசுப்பி மணியன் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி யில் செல்போன் தகராறில் 31 வயது பெருமாள் என்பவர் கற்களால் தாக்கி கொலை செய்யப்பட்டார். கரூர் மாவட்டம் குளித்தலை அருகே மேல விட்டுக்கட்டி பகுதியில் 60 வயது மூதாட்டி இளஞ்சி யம் நகைக்காக கழுத்தறுத்து படு கொலை செய்யப்பட்டார்.

ஈரோடு மாவட்டம் சென்னிமலை அருகே வாய்க்கால் புதூரில் மாரிமுத்து என்பவர் சாக்கடை கால்வாய்க்குள் தள் ளிவிட்டு கொலை, கன்னியாகுமரி மாவட் டம் சுசீந்திரம் அருகே உதிரப்பட்டி கிரா மத்தில் வீடு புகுந்து வனஜா என்ற பெண் தாக்கப்பட்டு கொலை என 24 மணி நேரத்தில் 12 கொலை சம்பவங்கள் அரங்கேறியுள்ளன.

## ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமான நிறுவனம் வெளியிட்டுள்ள

# புதிய குளிர்கால விமான சேவைகள் அட்டவணையில் சென்னை புறக்கணிப்பு!

*சென்னை, அக்.8 -*

*ஏர் இந்தியா எக்ஸ்பி ரஸ் விமான நிறுவனம் தனது குளிர்கால விமான சேவைகளுக்கான புதிய கால அட்டவணையை, வரும் 25ம் தேதி முதல் இயக்க தொடங்குகிறது. ஏற்கனவே நாடு முழுவ தும் கோடை காலங்களில் 3,150 விமான சேவை களை இயக்கி வந்தது.*

*இப்போது குளிர் காலங்களில் 4,100 விமான சேவைகளாக, அதிகரிக்கப்பட்டுள்ளது. அதோடு ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் இணைப்பு விமானங்கள், வாரத் திற்கு 1,330 விமான சேவைகளாக இருந்தது, தற்போது வாரத்திற்கு 1,600 விமான இணைப்பு சேவைகளாக, அதிகரிக் கப்பட்டுள்ளது. ஆனா லும் தமிழ்நாட்டுக்கு குறிப்பாக சென்னைக்கு, பெரும் ஏமாற்றமான நிலையைதான் உரு வாக்கி உள்ளது.*

*சென்னை விமான நிலையத்தில் இருந்து ஏற் கனவே, துபாய், சார்ஜா, தமாம், சிங்கப்பூர், கோலாலம்பூர், இலங்கை, மாலத்தீவு உள்ளிட்ட பல இடங்களுக்கு, ஏர் இந் தியா மற்றும் ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமான நிறுவ னங்களின் விமான சேவைகள், இயக்கப் பட்டு வந்தன. அந்த சேவைகள் படிப்படியாக குறைக்க ப்பட்டு, முழுவ துமாக நிறுத்தப்பட்டு விட்டது.*

*அதைப்போல் உள் நாட்டு விமான சேவைக ளின் ஏர் இந்தியா, ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமான நிறுவனங்கள், சென்னையில் இருந்து அந்தமான், ஐதராபாத், திருவனந்த புரம், மதுரை, திருச்சி, கோவை உள் ளிட்ட விமான நிலையங்க ளுக்கு, விமான சேவை களை இயக்கி வந்தன. அவைகள் நிறுத்தப்பட்டு விட்டன.*

*தமிழ்நாட்டு பயணிக ளுக்கு ஏமாற்றம்!*

*இந்நிலையில் தற்போ தைய குளிர் கால புதிய அட்டவணையில், ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமான நிறுவனம், ஏற்க னவே இயக்கப்பட்டு, நிறுத்தப்பட்டுள்ள ஏர் இந்தியா, எக்ஸ்பிரஸ் சர் வதேச மற்றும் உள்நாட்டு விமான வழித்தடங்க ளில், மீண்டும் புதிதாக ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமான நிறுவனம் விமான சேவைகளை தொடங்கும் என்று, பய ணிகள் வெகுவாக எதிர் பார்த்து இருந்தனர். ஆனால் அந்த அட்டவ ணையில் தமிழ்நாட்டு விமான பயணிகளுக்கு ஏமாற்றமே ஏற்பட் டுள்ளது.*

*சென்னை சிங்கப்பூர் சென்னை இடையே, தினசரி விமானங்களாக இயக்கப்பட்டு வந்த, ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமான சேவைகள், கடந்த 3 மாதங்களாக நிறுத்தப்பட்டு விட்டன. இப்போது வருகிற 25ம் தேதி முதல், சென்னை சிங்கப்பூர் சென்னை இடையே, தினசரி விமா னங்களாக, வாரத்துக்கு 14 விமான சேவைகளை புதிதாக இயக்குகிறது. இந்த விமானம், சென்னை சர்வதேச விமான நிலையத்தில் இருந்து, தினமும் அதி காலை 2.05 மணிக்கு சிங் கப்பூர் புறப்பட்டு செல்கி றது. அதைப்போல் சிங்கப்பூரில் இருந்து, ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானம் புறப்பட்டு, தினமும் இரவு 8 மணிக்கு, சர்வதேச விமான நிலை யம் வந்து சேர்கிறது.*

*இந்த சிங்கப்பூர் புதிய விமான சேவை தவிர, பெரிதும் எதிர்பார்க்கப் பட்ட சென்னை துபாய், இலங்கை, கோலாலம்பூர், தமாம், சார்ஜா, மாலத் தீவு உள்ளிட்ட விமான சேவைகள் எதுவும் மீண் டும் தொடங்கவில்லை.*

*அதைப்போல் சென் னையில் இருந்து உள் நாட்டு விமானங்களான அந்தமான், ஐதராபாத், திருவனந்தபுரம், திருச்சி, கோவை, மதுரை உள் ளிட்ட விமான நிலையங் களுக்கான விமான சேவைகள் மீண்டும் தொடங்கவில்லை.*

*ஆனால் பெங்களூர் கோவை இடையே, வாரத்திற்கு 14 புதிய விமான சேவைகளையும், பெங்களூர் மதுரை இடையே, வாரத்திற்கு 7 விமான சேவைகளையும், ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமான நிறுவனம் வரும் 25ம் தேதியில் இருந்து, புதிதாக தொடங்குகிறது.*

*இவைகள் தவிர பெரி தும் எதிர்பார்க்கப்பட்ட அந்தமான், ஐதராபாத், திருச்சி, கோவை, மதுரை விமான நிலையங்களுக்கு, சென்னையில் இருந்து புதிய விமானங்கள் எது வும் இயக்கப்படவில்லை. ஏர் இந்தியா மற்றும் ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமான நிறுவனங்கள் தொடர்ந்து, தமிழ் நாட்டை, குறிப்பாக சென்னையை விமான சேவைகள் இயக்குவதில், புறக்கணித்து வருவதாக, பயணிகள் தரப்பில் கூறு கின்றனர்.*

# கூட்டுறவு வங்கிகளில் கிராமிற்கு ரூ.10,000 வரை நகைக்கடன் வழங்க உத்தரவு!

*சென்னை, அக். 8 -*

*தமிழகத்தில் கூட்டு றவு வங்கிகள் மற்றும் கூட்டுறவு சங்கங்களில் தங்க நகையை அடமா னம் வைத்தால், கிரா முக்கு தற்போது அதிக பட்சமாக, 7,000 ரூபாய் கடன் வழங்கப்பட்டு வருகிறது.*

*உலகம் முழுவதும் ஏற்பட்டுள்ள போர் உள்பட பல்வேறு கார ணங்களால் தங்கம் விலை உயர்ந்து வருகி றது. இதனால், தேசிய மற்றும் தனியார் துறை களை சேர்ந்த வங்கி கள், நிதி நிறுவனங்க ளில், கிராம் தங்கத்துக்கு அதிகபட்சம், 10,000 ரூபாய் வரை கடன் வழங்கப்படுகிறது.*

*இதேபோல், அதிக வாடிக்கையாளர்களை ஈர்க்க கூட்டுறவு நிறுவ னங்களிலும், கிராம் தங்கத்திற்கு அதிகபட் சம், 9,000 முதல், 10,000 ரூபாய் வரை கடனை உயர்த்த, கூட்டுறவு துறை முடிவு செய்துள் ளதாக முன்பு தகவல் வெளியானது.*

*இந்நிலையில், கூட்டு றவு நிறுவனங்களில் வழங்கப்படும் நகைக்க டன்களுக்கு கிராமிற்கு ரூ.10 ஆயிரம் வரை கடன் வழங்கப்படும் என தமிழக அரசு அறி வித்துள்ளது.*

*கூட்டுறவு நிறுவ னங் களில் இதுவரை கிரா மிற்கு ரூ.7000 வரை வழங்கப்பட்ட நிலை யில் தற்போது ரூ.10,000 வரை வழங்க உத்தரவி டப்பட்டுள்ளது.*

*பிற வங்கிகளில் வழங் குவது போலவும் தங்க நகைகளின் சந்தை மதிப் புகளுக்கு ஏற்ப கிரா மிற்கு வழங்கப்படும்.*

*ரூ.10 ஆயிரம் அல் லது நகை சந்தை மதிப் பில் 75 சதவீதம் என மாற்றியமைத்து அறி விக்கப்பட்டுள்ளது.*

## சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

# செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

## (06.10.2026)



1. நெல்லை டவுணில் பாத்திர வியாபாரி வீட்டின் கதவை உடைத்து 33 சவரன் தங்க நகை கொள்ளை போலீசார் விசாரணை

2. பாத்திர வியாபாரி சங்கரன்கோவில் அருகே உள்ள சொந்த கிராமத்திற்கு கோவில் கடைக்கு சென்ற நிலையில் மர்ம நபர்கள் கைவரிசை

மாநில அரசு இந்தியை திணிக்கும் அட்டுழியம், மாநில நெடுஞ்சாலைக்கு இந்தி பெயர் சூட்டிய த.வெ.க. அரசு, தற்போது கோவை மற்றும் கரூர் அரசு மருத்துவமனைகளில் வழங்கப்படும் மாத்திரை கவர்களிலும் இந்தி மொழி திணிப்பு , நோயாளிகள் அதிர்ச்சி ...

திண்டுக்கல் மாவட்டம் சாணார்பட்டி காவல் நிலையம் அருகே கொலை வழக்கில் நிபந்தனை ஜாமீன் பெற்ற வாலிபர் மனைவியுடன் சென்று கையெழுத்துப் போட்டு இருசக்கர வாகனத்தில் வீடு திரும்பிய போது மனைவி கண் முன்னே சரமாரியாக வெட்டிச் சாய்த்த கும்பல்...



மதுரை மாவட்டம் சமயநல்லூர் அருகே மது போதையில் ஏற்பட்ட தகராறில் வாலிபரை நிர்வாணமாக்கி கத்தியால் குத்தி கொலை செய்த கும்பல்....

கிச்சிடிபாளையம் அருகே கடம்பூர் கிராமத்தில் காங்கிரஸ் பிரமுகரின் மனைவி கழுத்தை நெறித்துக் கொலை, ஐந்து சவரன் நகை கொள்ளை ....

சென்னை மயிலாப்பூரில் சாலையில் நடந்து சென்ற வாலிபரை மது போதையில் இரண்டு வாலிபர்கள் மரக்கட்டையால் அடித்துக் கொன்றனர் ...

சென்னை துரைப்பாக்கம் அருகே நள்ளிரவில் மதுபானம் கேட்டு தொல்லை கொடுத்த மனைவியை துப்பட்டாவால் இறுக்கி கொலை செய்த போதை கணவன் சிக்கினார்...



தென்காசி மாவட்டம் சிவகிரி அருகே கோவில் திருவிழாவில் பங்கேற்றதை கணவன் கண்டித்ததால் இரண்டு குழந்தைகளை எரித்துக் கொன்று. தானும் தீ வைத்து தற்கொலை செய்து கொண்ட பரிதாபம் ...

ஈரோடு மாவட்டம் சென்னிமலை அருகே பொதுமக்களை அவதூறாகப் பேசிய பெண்ணை தட்டிக் கேட்ட முதியவர் கால்வாயில் தள்ளி கொலை...

சேலம் மேட்டு மக்கன் தெருவில் பெண் மீது பெட்ரோல் ஊற்றி தீ வைத்து எரிப்பு. கணவர் சிக்கினார் ...

ஈரோடு மாவட்டம் கோபி அருகே கரட்டிபாளையத்தில் இளம் பெண் வீட்டில் தனியாக இருந்த போது அத்துமீறி உள்ளே நுழைந்து பலாத்காரம் செய்த வாலிபர் சிக்கினர் ...



சென்னை யானை கவுனி அருகே சாலையில் நடந்து சென்ற இளம் பெண்ணிடம் சில்மிஷம் செய்த வாலிபர் சிக்கினார் ...

தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் அருகே ஒன்பது வயது சிறுவனுக்கு பாலியல் தொல்லை கொடுத்த மூன்று சிறுவர்கள் சிக்கினர் ...

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அருகே +2 மாணவனை வழக்கில் இருந்து விடுவிக்க ரூ.10,000 லஞ்சம் கேட்ட உமராபாத் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் சிக்கினர்.....

சென்னை ஏழு கிணறு மருத்துவ மாணவிகள் விடுதியில் தங்கியிருந்த மாணவிகளின் நகைகள் திருட்டு ...

சென்னை கிழக்கு முகப்பேரில் பைக்கில் வந்த தனியார் நிறுவன வாலிபருக்கு வழி விடுவதில் ஏற்பட்ட தகராறில் வாலிபருக்கு சரமாரியாக உருட்டு கட்டை அடி ...



சென்னை எண்ணூர் ரயில் நிலையம் அருகே பட்டாக் கத்தியுடன் இரு கோஷ்டி மாணவர்கள் மோதிக்கொண்டதால் பரபரப்பு. ரயில் பயணிகள் பீதி ...

சென்னை வடபழனி மாநகர சொகுசு பேருந்தில் போதையில் பயணிகளை தாக்கி இளம் பெண் கலாட்டா . போதை கலாச்சாரம் தீவிரமாக பரவுவதால் பொதுமக்கள் அச்சம் ...

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி ரயில் நிலையம் அருகே காவல்துறையினரின் சோதனையில் ஒடிசாவில் இருந்து கடத்திவரப்பட்ட 100 கிலோ கஞ்சா சிக்கியது. கஞ்சா கடத்தலில் ஈடுபட்ட ஒருவர் சிக்கினார்...

நாமக்கல் மாவட்டம் வேப்பநத்தம் புதூரில் மாட்டுக் கொட்டகையில் பதுக்கி வைத்த 50 கிலோ வெடி மருந்துகள் சிக்கியது. அ.தி.மு.க. நிர்வாகி சிக்கினார் ...